**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் மனு எண் : 488/2021**

**26.04.2023**

**வழக்கு சாட்சி : PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மன்னாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் எனக்கு வரவில்லை. என்னுடைய பிரமாண பத்திரத்தில் எனது வயது 80 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 1 மகன், 2 மகள்கள் உள்ளார்கள். பிரதிவாதியின் கணவர் தேவராஜ் எனது மகன். அவர் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்கு போனார். வழக்கு சொத்தை 1986ஆம் வருடம் எனக்கு அரசாங்கத்தில் ஒதுக்கீடு செய்தார்கள். தாவா சொத்தை காலியிடமாக வாங்கினோம். என் மகன் தேவராஜக்கு திருமணம் நடந்த போது சுமார் 30 வயது இருக்கும். முதல் வாதியான என் மகளுக்கு முதலில் திருமணம் நடைபெற்றது. பின்னிட்டு தேவராஜ்க்கு திருமணம் நடந்தது. தேவராஜ்க்கும் பிரதிவாதிக்கும் இடையில் ஏற்படும் சண்டை காரணமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் பிரதிவாதிக்கு பணம் எதுவும்

கொடுக்கவில்லை. தேவராஜ் தான் தான் சம்பாதிக்கும் பணத்தில் பிரதிவாதிக்கு கொடுப்பார். எனது மகள் விஜயா தற்கொலை எதுவும் செய்து கொள்ளவில்லை. அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனார் என்றால் சரியல்ல. முதல் வாதியான ஜோதி தனது முதல் கணவரை விவாகரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். தனது இரண்டாவது கணவரோடு வழக்கு சொத்தில் முதல் வாதி உள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தில் தற்பொழுது இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் தேவராஜ் தனது சகோதரி இறந்த துக்கத்தில் மது அருந்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு நான் பிரதிவாதியுடன் அடிக்கடி சண்டைபோட்டு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சண்டையின் காரணமாக தாவா வீட்டை பூட்டிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 08.03.2021 அன்று முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் திருமங்கலம் காவல் நிலையம் ஆகியவற்றில் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அதன்படி பிரதிவாதி தாவா சொத்தில் இன்று வரை இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் இறந்த 21 நாட்களில் நான் முதல் வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் தேவராஜ் சம்பாதித்த தொகையை வைத்து தான் தாவா வீடு கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த தொந்தரவின் பிரதிவாதியின் கணவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திலிருந்து பிரதிவாதியை வெளியேற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அம்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு போட்ட 14 சவரன் நகை, தேவராஜ்க்கு போட்ட 2 பவுன் நகை, குழந்தைக்கு போட்ட நகை அனைத்தும் என்னிடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவருக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றாலும் அவர் இறந்துவிட்ட காரணத்தினால் பிரதிவாதிக்கும் அவரது குழந்தைக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது

என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் தாவா வழக்க நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.